මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இலக்கம் : LAE/2025/83** **2025.05.01**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
## இயலாமைக்குட்பட்ட வாக்காளர்களை தேர்தல் செயற்பாட்டில் உள்ளீர்ப்பதற்காக வசதிகளை வழங்குதல்

உள்ளூரதிகார சபைகளுக்கான வாக்கெடுப்புச் செயற்பாடுகளின்போது, எதுவித அசௌகரியங்களுமின்றி இயலாமைக்குட்பட்ட வாக்காளர்களுக்கு அவசியமான வசதிகள் (Reasonable Accommodations) வழங்குவதை உறுதி செய்து கொள்ளும் நோக்குடன் தேர்தல் ஆணைக்குழுவினால் கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

*02.* வாக்கெடுப்பின் போது, வாக்குச் சீட்டினை செல்லுபடியானதாக அடையாளமிட்டுக் கொள்வதற்கு முடியாமல் இருக்கும் பூரண அல்லது பகுதியளவிலான விழிப்புலனற்றவர்கள் மற்றும் இயலாமைக்குட்பட்ட வாக்காளரொருவருக்கு அவ்வாக்காளரின் கோரிக்கைக்கிணங்க சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் அவரது பணியாட்குழுவில் ஒருவர் முன்னிலையில் உதவியாளரைக் கொண்டு வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்காக ஒரு நபரை உடனழைத்துச் செல்ல முடியுமென்பதுடன் , அவரது வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியிலிடுவதற்கு வசதி செய்வதற்காக *2011* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க தேர்தல்கள் *(*விசேட ஏற்பாடுகள்*)* சட்டத்தினால் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*03.* உள்ளூரதிகார சபைகள் தேர்தலின் போது ஏதேனும் இயலாமை (உடலசைவுக் குறைபாடுடைய) காரணமாக வாக்கெடுப்பு நிலையத்திற்கு நடந்தோ அல்லது பொதுப் போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியோ அவ்வாக்காளருக்குச் செல்ல முடியாதிருப்பின், அதன் பொருட்டு வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்குரிய எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடிவது தொடர்பாக, உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் *82* எ*(4) (*ஈ*)* ஆம் பிரிவின் பிரகாரம் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

*04.* வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள வளவின் நுழைவாயிலிலிருந்து அந்நிலையம் வரை *100* மீட்டர் அல்லது அதிலும் கூடிய தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பின், ஏதேனும் இயலாமை காரணமாக நடந்து செல்ல முடியாதவாறு போவதற்கும் வருவதற்கும் சிரமமான நபருக்கு வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள வளவின் நுழைவாயிலிலிருந்து அந்நிலையம் வரை செல்வதற்கு முச்சக்கர வண்டி மூலமாக இலவசமாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

*05.* பூரண அல்லது பகுதியளவிலான விழிப்புலனற்ற வாக்காளர்களுக்காக தனியாக தமது வாக்கை அடையாளமிடுவதற்காக "வாக்குச் சீட்டுக்கு வழிகாட்டும் தொடுகைச் சட்டகம் *(Tactile Stencil Frame)* " ஒன்றைத் தயாரித்து அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விழிப்புலனற்றவர்கள் இந்தத் தொடுகைச் சட்டகத்தைப் பயன்படுத்தி எதுவிதத் தடங்கலுமின்றி வாக்கை அடையாளமிடுவதற்கு அவசியமான வசதிகளையும், உதவிகளையும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வாக்கெடுப்பு நிலையப் பணிக்குழுவினருக்கு அறிவுறுத்துதல்கள் வழங்கப்பட்டுள்ளன..

*06.* முழு அளவில் இயலாமைக்குட்பட்டோருக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை, வாக்களிப்பின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய செல்லுபடியான ஆவணமொன்றாக (செல்லுபடியான அடையாள அட்டை) தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக் கொள்வதனால், அதனை வாக்கெடுப்பு நிலையத்தில் சமர்ப்பிக்கின்ற வாக்காளரொருவருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*07* செவிப்புலனற்ற வாக்களர்கள் அறிந்து கொள்வதற்காக வாக்கெடுப்பு நிலைய வளவினுள் காட்சிப்படுத்தப்படுகின்ற (செல்லுபடியான ஆளடையாள ஆவணங்கள், வாக்கெடுப்பு நிலையத்தில் தடை செய்யப்பட்டவை) அறிவித்தல்கள் யாவும் சைகை மொழியிலான உருவப்படங்கள் சகிதம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வறிவித்தல் பத்திரங்கள் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படும்..

*08.* இம்முறை உள்ளூரதிகார சபைகள் தேர்தலில் ஒவ்வொரு உள்ளூரதிகார சபைக்காகவும் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின், சுயேச்சைக்குழுக்களின் வேட்பாளர்களது விபரங்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவின் ஈ – சேவை ஊடாகப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், அவை யுனிகோட் எழுத்துக்களில் *(Unicode font)* தயாரிக்கப்பட்டுள்ளமையால் திரை வாசிப்பு வசதிகளுடன் கையடக்கத் தொலைபேசி அல்லது கணினித் திரை ஊடாக *(Screen Reader)* கண்டு கொள்ள முடியுமென்பதுடன், விழிப்புலனற்றவர்களுக்கு செவிவழியாகப் பெற்றுக்கொள்ளும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (தேர்தல் ஆணைக்குழுவின் *https://eservices.elections.gov.lk* என்னும் இணையவழியூடாக ஈ -சேவைக்குள் பிரவேசித்து அங்கு "குடிமக்களுக்கு" என்பதன் ஊடாகச் சென்று "தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விபரம்" என்னும் ஈ-சேவை மூலம் உட்பிரவேசித்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்படுத்திய பின்னர் "KYC" என்பதில் உள்ளூரதிகார சபைகளுக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பாக குறியீடும் அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அது தேர்தல் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.)

*09.* வாக்கெடுப்பு நிலையத்தில் இயலாமைக்குட்பட்டோருக்கு அவசியமான மேலதிக வசதிகள் ;

*9.1.* சக்கர நாற்காலி அல்லது வேறு ஊன்றுகோல் உபகரணங்கள் பயன்படுத்துகின்ற வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தினுள் செல்வதற்குத் தடைகள் எதுவுமில்லாதவாறு (கிடங்குகள், வாய்க்கால்கள், திடல்கள் மற்றும் ஏனைய தடங்கல்கள்) பாதை அமைந்துள்ளதாவென ஆய்ந்தறிந்து தடைகள் இருப்பின், அவற்றை அகற்ற வேண்டியிருப்பதுடன், வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள கட்டிட நுழைவாயிலில் நிரந்தர சாய்வுதளம் அமைக்கப்பட்டிருப்பின் அதனூடாகச் செல்வதற்கு வழி செய்வதுடன், அவ்வாறான சாய்வுதளம் இல்லாத நுழைவாயிலூடாகச் செல்கின்ற சக்கர நாற்காலி பயனாளிகளின் வசதிக்காக தற்காலிகமான சாய்வுதளம் ஒன்றை

அமைத்து வாக்கெடுப்பு நிலையத்திற்குள் செல்வதற்கு உரிய ஒத்துழைப்பினை கடமையிலுள்ள அலுவலர்கள் வழங்குதல் வேண்டும்,

9.2. வாக்கினை அடையாளமிடும் போது இரகசியத்தன்மை மற்றும் சுதந்திரத்திற்குத் தடங்கல் எதுவுமின்றி வாக்களிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

9.3. வாக்கினை அடையாளமிடும் சிற்றறையினுள் போதுமானளவு வெளிச்சம் வருகின்ற வகையில் மின்சார ஒளியுள்ள இடத்தில் வாக்குச் சிற்றறையை அமைத்துக் கொள்ளல் உசிதமானதாகும்.

9.4. சக்கர நாற்காலிப் பயனாளிகள் மற்றும் குள்ளமான உயரங்கொண்ட நபர்கள் ஆகியோரின் வசதி கருதி வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியினுள் போடுவதற்கு உரியவாறு அவ்வாக்குப்பெட்டி வைக்கப்பட்டுள்ள மேசை உயரம் குறைந்ததாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

9.5. பகுதியளவில் விழிப்புலனற்ற நபர்களுக்காக எழுத்துக்களை உருப்பெருக்கிக் காட்டுகின்ற உபகரணங்களை (நுணுக்குக் காட்டி, விசேட மூக்குக் கண்ணாடி போன்ற தமது சொந்தப் பாவனைப் பொருட்கள்) வாக்கெடுப்பு நிலையத்திற்குள் எடுத்துச் செல்ல முடியுமென்பதனால், அவ்வுபகரணங்களைப் பயன்படுத்தி வாக்குச் சீட்டிலுள்ளவற்றைப் பார்த்து சரியாக அடையாளமிட்டுக் கொள்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

9.6. வாக்குச் சீட்டிலுள்ளவற்றை வாசித்துக் கொள்ள முடியாதவர்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் அவசியமெனக் கோருகின்றவர்களுக்கு அதனை மெதுவாக வாசித்து தெளிவுபடுத்திய பின்னர் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு காலஅவகாசம் வழங்குதல் வேண்டும்.

10. அதன் பிரகாரம், இயலாமைக்குட்பட்ட வாக்காளர்கள் தமது வாக்கை அடையாளமிட்டுக் கொள்வதில் முகங்கொடுக்கக்கூடிய அசௌகரியங்கள், தடங்கல்களைக் குறைத்துக் கொள்வதற்காக தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற தலைமை தாங்கும் அலுவலர்கள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலையப் பணிக்குழுவினர் யாவரும் தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளைப் பின்பற்றுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

இயலாமைக்குட்பட்டவர்கள் ஏனையவர்களுக்கு நிகராகவும், நியாயமான அடிப்படையிலும் தேர்தல் செயற்பாட்டில் உள்ளீர்த்தல் மற்றும் அவர்களது வாக்குரிமையைப் பாதுகாத்தல் தொடர்பாக தொடர்ந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**